அந்த அடிப்படையில் நமது நாட்டிலும் தற்போது இல்லாவிட்டாலும் எதிர்காலத்திலேயாவது கடல் நீரை எந்த, எந்த இனங்களுக்குப் பயன்படுத்தலாம், நீர்ப்பாசனத்திற்கோ அல்லது குடிநீருக்காகவோ அல்லது மின்சாரத்திற்காகவோ மாற்றுகின்ற இந்த அடிப்படையில் விஞ்ஞானிகள் கொண்ட ஒரு குழுவை அமைத்து அது பரிசீலனை செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியபடி, பாசனத்திற்காகவும், மின்சாரத்திற்காகவும், குடிதண்ணீருக்காகவும் கடல் நீரைப் பயன்படுத்தலாம் என்ற கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால், பாசனத்தைப் பொறுத்தமட்டிலும் தண்ணீர் அதிகமான அளவு தேவைப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஏற்கெனவே பாசன நிலத்திற்கும் கடலுக்கும் உயரத்தில் மாறுபாடு இருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்த முறையில், கடல் நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்றால், நீரேற்று இயந்திரங்கள் மூலமாக, தண்ணீரை மேலே கொண்டு சென்றால் தான் பயன்படுத்த முடியும். கடல் நீரைச் சுத்தப்படுத்தி, அதற்குப் பிறகு நீரேற்று இயந்திரங்கள் மூலமாகத் தண்ணீர் கொண்டு செல்வதைவிட, பல புதிய திட்டங்களைத் தீட்டி, ஏற்கெனவே மேற்கு நோக்கி பாய்கின்ற, நதிநீர் அரபிக் கடலில் விழுந்து வீண் போகாமல், கிழக்குப் பக்கம் திருப்பி, தமிழகத்தை வளப்படுத்தக் கூடிய அளவுக்கு நடவடிக்கை மேற்கொள்ள வாய்ப்பு இருப்பதால், அதைப் பரிசீலிப்பதற்கில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேமாத்தூர் அணைக்கு நீர்வரத்து

569—(*வினா எண். 7336)—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாச்சலம் வட்டத்தில் மேமாத்தூர் அணைக்கு மேல் பாகத்தில் மணிமுத்தாறு, கோமதி, மாயூரா மற்றும் 10 அணைக்குமேல் கட்டப்பட்ட காரணத்தினால் 2,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமா. . சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

1986 ஏப்ரல் 25]

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பாசனத்திற்காக வேண்டி 100 ஆண்டுகளுக்கு முன்னே வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்ட மேமாத்தூர் அணை இன்று வரை எந்தவிதத்திலும் சீர் செய்யப்படவில்லை. அந்தப் பாசன அணைக்கு மேலே இதுவரை 10 அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதிலே, கோமுகி, மயூரா, மணிமுத்தாறு ஆகிய 3 அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதற்குக் கீழே உள்ள விவசாய நிலங்கள் பூராவும் பாசன வசதியற்று, அவர்கள் நன்செய் பயிர் செய்வதா, புன்செய் பயிர் செய்வதா என்ற நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்பிருந்த அமைச்சர் அவர்கள் அங்கே வலதுகரைக் கால்வாய் வழியாக சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து விடுவதாக உறுதி தந்தார்கள். அந்த உறுதி என்னவாயிற்று என்று தெரியவில்லை. அதனாலே, அதற்குக் கீழே உள்ள விவசாயிகளுக்கு நல்ல திட்டத்தை அமைத்துத் தரவேண்டும். இல்லையேல், எங்கள் தண்ணீரைத் தடுக்கக்கூடியவர்களைத் தடுத்து எங்களுக்குத் தண்ணீர் விடுவதற்கு உத்தரவிட வேண்டும்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்த மேமாத்தூர் அணைக்கட்டிற்கு கோமுகி, மயூரா, மணிமுத்தாறு, திருமுக்தா ஆகிய 4 ஆறுகளி, லிருந்து மட்டுமல்லாமல், கல்ராயன் மலைப் பகுதியிலே வரக்கூடிய மழைத் தண்ணீரும் சேர்த்து, அந்த அணைக்கட்டிலே தேக்கப்பட்டு, பயன்பட்டு வருகிறது. இந்த அணைக்கட்டுக்கு மேல்புறத்திலே 10 அணைக்கட்டுகள் கட்டியிருப்பதால், இந்த அணைக்கட்டுக்குரிய பாசனப் பரப்பு பாதிக்கப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் மூலக் கேள்வியிலும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள், இங்கேயும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், உண்மை நிலை என்னவென்றால், ஏற்கெனவே, இந்த மேமாத்தூர் அணை கட்டிய பிறகு, அந்த அணைக்கட்டு நிரம்பி, மேற்கொண்டு, தண்ணீர் வீணாக, அடிக்கடி கடலுக்குப் போய்ச் சேருகிறது என்ற நிலையை உணர்ந்துதான் இந்தத் தண்ணீரை வீண்படுத்தாமல், பாசனத்திற்குப் பயன்படுத்துவதற்காக மேலும் அணைகள் கட்டப்பட்டன. அந்த அணைகள் கட்டிய பிறகும் கூட மேமாத்தூர் அணைக்கட்டுக்கு உரிய பாசனப் பரப்பு 5,600 ஏக்கர் என்று இருந்தாலும், 5,760 ஏக்கராக்கள் இந்த மேமாத்தூர் வாயிலாகப் பாசனப் பயனைப் பெற்றுக் கொண்டு வருகின்றன. அந்த வகையிலே பார்த்தால், இந்தக் கூடுதலான அணைகளைக் கட்டியதால், எந்தவிதமான பாதிப்பும் இல்லையென்பதை மிகத் தெளிவாக நாம் உணரலாம். அந்த வகையில், விவசாயிகளுக்குப் பாதிப்பு இல்லாமல் கூடுதலாக விவசாயிகளுக்குப் பலன் அளிக்கும் வகையில்தான் இந்தத் திட்டங்களைத் தீட்டி அரசு செயல் படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். தியாகராாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற விவசாயிகளுக்குப் பலன் அளிப்பதற்கு திட்டம் தீட்டியதை நாங்கள் வரவேற்கிறோம், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் ஏற்கெனவே பலன்பெற்ற பாதிக்கப்பெற்ற விவசாயி களுக்குச் செய்த பரிகாரம் என்ன? அந்தப் பகுதியிலே பல்லாண்டுக் காலமாக இருக்கிற அவர்களைப் பாதிப்புக்குள்ளாக்கிவிட்டு, இப்பொழுது புதிதாக, சிலபேர்களுக்குப் பயன் அளிக்கிறோம் என்று சொன்னால், எந்த அளவுக்கு அவர்கள் உரிமை பாதிக்கப் பட்டிருக்கிறது ? அதற்கு மாற்று யோசனை என்ன ? எங்க ளுடைய நிலையை உணர்ந்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ? ஒவ்வொரு அணை கட்டும்போதும், எங்களுக்கு வர வேண்டிய தண்ணீரைத் தடுக்கவில்லை, உபரியான தண்ணீரைத்தான் எடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். உபரியான தண்ணீரைத் தான் தடுக்கிறோம் என்று சொல்லி, உண்மையாக வருகிற தண் ணீரைத் தடுக்கிறீர்கள் என்றால், அதற்காகத்தான் முன்பிருந்த அமைச்சர் அவர்கள் வலது கரை கால்வாய் கொண்டு வந்து சாத்தனூர் அணையிலிருந்து, தண்ணீர் கொண்டு வந்து விடுவதாக, உறுதி அளித்தார். ஆகவே இந்த 10 அணைக்கட்டுகளினால் பாதிக்கப்பட்டிருக்கிற தண்ணீர் வருவதற்கான வாய்ப்பு தாருங்கள். ஏதாவது செய்கிறோம் என்றுசொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, அணைக் கட்டுகள் என்று சொன்னால் மேட்டூர் அணை போன்று பெரிய அணைகளை கட்டிவிட்டார்கள் என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. வீணாகப் போகின்ற தண்ணீரை தேக்கி வைத்து, பாசனத்திற்குப் பயன்படுத்தியிருக்கிறோம். தண் ணீரை தேக்கி வைத்து முறையாக அணையைத் திறந்து விட வில்லை, ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமென்று விவசாயிகள் நன்மையைக் கருதி கேட்டால் அதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து எது நடைமுறைக்கு சாத்தியமோ அதை இந்த அரசு செய்யும். ஆனால் வீணாகப் போகிற தண்ணீரைப் பயன் படுத் தக் கூடாது என்பது ஆபத்தான வாதமாகும். ஒரு அணை கட்டி, தண்ணீரை முறையாகப் பயன்படுத்துவதற்கு முன்னால் பாசனப் பரப்பு, ஆயக்கட்டு கூடுகிற அளவு ஆகியவற்றைப்பற்றி இந்த அரசுக்கோ அல்லது துறைக்கோ தகவல் தெரிவிப்பதற்கு முன் யார், யார், எந்த எந்த அளவுக்கு, என்ன என்ன பயிர்களை போட்டு இதன் வாயிலாக தண்ணீர் பெறுகிறார்கள் என்று அடங்கல் எழுதுகிறார்கள். இந்த அடங்கல் முறை எல்லோ ருக்கும் தெரியும் என்று கருதுகிறேன். அதன் அடிப்படையில் தான் தகவல் தரப்படுகிறது. இந்த மேமாத்தூர் அணைக் கட்டின் மூலம் ஏற்கெனவே 5,500 ஏக்கர் நிலம் பாசனம் பெற்றது. இப்போது 5,700 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அணைக்கு மேலே அணை கட்டப்பட்டதால் பாதிப்பு இல்லை என்று நிச்சயமாகச் சொல்ல

முடியும். பாதிப்பு இருக்கிறது என்று கருதினால், தகுந்த ஆதாரத்தோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிரூபித்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

நத்தம் தொகுதியில் புதிய அணைகள்.

1—வினா 1941—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி சாணார்பட்டி ஒன்றியம் அஞ்சுகுழிப் பட்டியில் படுகைக்காடு அணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வருமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

2—வினா 1943—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி சாணார்பட்டி ஒன்றியம் கூவனூத்து கிராமம் குளக்காரன்பட்டியில் வசிக்கும் ஊர் பொதுமக்கள் சிறுமலையில் ஓர் அணை கட்டுவதற்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நிறைவேற்ற அரசு முன் வருமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

காட்டுப்பட்டி—சீலமுத்து நாயக்கனூர் சாலையில் புதிய பாலம்.

3—வினா 2248—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி கம்பளியம்பட்டி பஞ்சாயத்து, சீலமுத்து நாயக்கனூரில் காட்டுப்பட்டியிலிருந்து செல்லும் சாலை அருகில் உள்ள ஓடை மேல் பாலம் கட்ட அரசு முன் வருமா?